# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணைபதள முகவரி: www.tnlbo.tn.gov.in


முறையீட்டு மனு எண்: 214/மா/2018 நாள்21.1.2020

திருமதி. M. ஆரோக்கியம்மாள்,
திண்டுக்கல். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி. – எதிர் மனுதாரர்

திண்டுக்கல் மாநகராட்சி, செல்லாண்டியம்மன் கோவில் வடக்குத் தெரு எண். 53பி என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. M. ஆரோக்கியம்மாள் என்பவரது 11.10.2018 நாளிட்ட மனு 15.10.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு முறையீட்டு மனு எண்.214/மா/2018 என எண்ணிடப்பட்டு அறிக்கை பெறப்பட்டு, கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

**ஆணை**

முறையீட்டு மனுதாரர் 11.10.2018 நாளிட்ட தனது முறையீட்டு மனுவில் திண்டுக்கல் மாநகராட்சி, செல்லாண்டியம்மன் கோவில் வடக்குத் தெரு, எண். 53பி என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், தனக்கு சொத்துவரி விதிப்பு செய்து தராமல் திண்டுக்கல் மாநகராட்சி தவிர்க்கிறது என்றும், அடிப்படை வசதி ஏதும் இன்றி மிகவும் சிரம்ப்படுவதாகவும், திண்டுக்கல் மாநகராட்சி, ஸ்கேவஞ்சர் காலனியில் வசிக்கும் திருமதி. காளியம்மாள் என்பவருக்கு சொத்து பத்திரம், பட்டா ஏதுமில்லாமல் சொத்துவரி விதிப்பு செய்து சொத்துவரி வசூலிக்கப்பட்டுள்ளது என்றும், அதன்

நகலினை இணைத்துள்ளேன் என்றும், திருமதி. காளியம்மாளுக்கு சொத்துவரி விதித்ததை போல் தனக்கும் சொத்துவரி விதிப்பு செய்ய திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடுமாறு கோரியுள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 23.10.2018 நாளிட்ட அறிவிப்பாணையில், முறையீட்டு மனு மீதான அறிக்கையினை சமர்ப்பிக்க திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் தனது 22.11.2019 நாளிட்ட அறிக்கையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் Roc No. 40032/2012/R1 நாள் 20.11.2019 சுற்றறிக்கையில் சொத்துவரி சீராய்வு பணியில் வரி உயர்வு தொடர்பாக சில மாற்றங்கள் செய்ய உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றும், புதிய சொத்துவரி நிர்ணயம் செய்யும் கணினி தொழில்நுட்ப சொத்துவரி நிர்ணயம் செய்யும் கணக்கீட்டு படிவத்தில் மாற்றம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் தக்க மேல்நடவடிக்கையில் இருந்து வருகிறது என்றும், அப்பணி முடிவுற்றதும் மனுதாரரின் வீட்டினை ஆய்வு செய்தும், ஆவணங்களை ஆய்வு செய்தும் தகுதியின் அடிப்படையில் புதிய வரிநிர்ணயம் செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 4.10.2019 நாளிட்ட அழைப்பாணையில் முறையீட்டு மனுதாரர் 02.12.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி தனது விளக்கத்தினை அளிக்குமாறு ஆணையிடப்பட்டது. முறையீட்டு மனுதாரர் 02.12.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகவில்லை.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு ஆணையரின் அறிக்கை ஏற்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் புதிய சொத்துவரி நிர்ணயம் செய்யும் கணினி தொழில்நுட்ப சொத்துவரி நிர்ணயம் செய்யும் கணக்கீட்டு படிவத்தில் மாற்றம் செய்யும் பணிகள் முடிவடைந்ததும் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கையின் மீது சொத்துவரி

விதிப்பு செய்ய உரிய விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 21–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலர்.

பெறுநர்:

1) திருமதி. M.ஆரோக்கியம்மாள்,
53பி, செல்லாண்டியம்மன் கோவில் வடக்குத்தெரு,
திண்டுக்கல் 624 001.

2) ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல்.

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரிகள்